# அக்டோபர் – 25 – புதன்

தூய கிறிஸ்மின்

"மிகுதியாகக் கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாக எதிர்பார்க்கப்படும்."

## முதல் வாசகம் : உரோமையர் 6 : 12 - 18

சகோதர சகோதரிகளே! உடலின் இச்சைகளுக்கு உங்களைக் கீழ்ப்படியச் செய்யும் பாவம் சாவுக்குரிய உங்கள் உடலின்மீது ஆட்சி செலுத்தவிடாதீர்கள். நீங்களோ உங்கள் உறுப்புக்களைத் தீவினையின் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்புவிக்காதீர்கள் மாறாக, இறந்தும் வாழ்வோராய் உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள் கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள். பாவம் உங்கள் மீது ஆட்சி செலுத்தக் கூடாது ஏனெனில் நீங்கள் இப்போது சட்டத்துக்கு உட்பட்டவர்கள் அல்ல் மாறாக, அருளின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். அதனால் என்ன? சட்டத்துக்கு உட்பட்டவர்களாய் இல்லாமல், அருளின் ஆட்சிக்கு உட்பட்டு இருப்பதால் நாம் பாவம் செய்யலாமா? ஒருபோதும் கூடாது. எதற்கு அடிமைகளாக உங்களை ஒப்புவித்துக் கீழ்ப்படிகிறீர்களோ அதற்கே நீங்கள் அடிமைகள் என்பது உங்களுக்குத் தெரியும் அன்றோ? அப்படியிருக்க, நீங்கள் பாவத்திற்கு உங்களையே அடிமையாக்கினால் சாவீர்கள் நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தால் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆவீர்கள். முன்பு பாவத்திற்கு அடிமைகளாய் இருந்த நீங்கள் பெற்றுக்கொண்ட போதனையில் அடங்கிய ஒழுக்க நெறியை உளமாரக் கடைப்பிடிக்கிறீர்கள். பாவத்தினின்று விடுதலை பெற்ற நீங்கள் கடவுளுக்கு ஏற்புடைய வாழ்க்கை நெறிக்கு அடிமைகளாயிருக்கிறீர்கள். அதற்காகக் கடவுளுக்கு நன்றி.

**பதில்பாடல் :** ஆண்டவரின் பெயரே எமக்குத் துணை

## நற்செய்தி : லூக்கா 12 : 39 - 48

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களைன நோக்கிக் கூறியதாவது: எந்த நேரத்தில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் தம் வீட்டில் கன்னமிட விடமாட்டார் என்பதை அறிவீர்கள்.நீங்களும் ஆயத்தமாய் இருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார்."அப்பொழுது பேதுரு, "ஆண்டவரே, நீர் சொல்லும் இந்த உவமை எங்களுக்கா? அல்லது எல்லாருக்குமா?" என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் கூறியது: "தம் ஊழியருக்கு வேளா வேளை படியளக்கத் தலைவர் அமர்த்திய நம்பிக்கைக்கு உரியவரும் அறிவாளியுமான வீட்டுப்பொறுப்பாளர் யார்?தலைவர் வந்து பார்க்கும் போது தம் பணியைச் செய்துகொண்டிருப்பவரே அப்பணியாளர். அவர் பேறுபெற்றவர்.அவரைத் தம் உடைமைக்கெல்லாம் அதிகாரியாக அவர் அமர்த்துவார் என உண்மையாக உங்களுக்குச் சொல்கிறேன்.ஆனால் அதே பணியாள் தன் தலைவர் வரக்காலந் தாழ்த்துவார் எனத் தன் உள்ளத்தில் சொல்லிக்கொண்டு ஆண், பெண் பணியாளர்கள் அனைவரையும் அடிக்கவும் மயக்கமுற உண்ணவும் குடிக்கவும் தொடங்கினான் எனில்அப்பணியாள் எதிர்பாராத நாளில், அறியாத நேரத்தில் அவனுடைய தலைவர் வந்து அவனைக் கொடுமையாகத் தண்டித்து நம்பிக்கைத் துரோகிகளுக்கு உரிய இடத்திற்குத் தள்ளுவார்.தன் தலைவரின் விருப்பத்தை அறிந்திருந்தும் ஆயத்தமின்றியும் அவர் விருப்பப்படி செயல்படாமலும் இருக்கும் பணியாள் நன்றாய் அடிபடுவான். ஆனால் அவர் விருப்பத்தை அறியாமல் அடிவாங்கவேண்டிய முறையில் செயல்படுபவன் அவரது விருப்பத்தை அறியாமல் செயல்படுவதால் சிறிதே அடிபடுவான். மிகுதியாகக் கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாகவே எதிர்பார்க்கப்படும். மிகுதியாக ஒப்படைக்கப்படுபவரிடம் இன்னும் மிகுதியாகக் கேட்கப்படும்" என்றார்.

**தியானம்:** சிபாரிசுகள் மூலமும், சில்லறைகள் வழியாகவும் காரியம் சாதிக்கத் துடிக்கும் கலாச்சாரத்தில் வளர்ந்தவர்கள் நாம். கடல் தாண்டி கண்ணியமாகக் காரியமாற்ற கடவுள் நம்மை இந்த நாட்டில் குடியமர்த்தியிருக்கின்றார் என்று தான் எண்ணத் தோன்றுகின்றது. குறுக்கு வழிகள், சில்லறையான சிந்தனைகள் என்பன இனியும் நம் வாழ்வில் தொடருவதை நாம் அனுமதிக்கலாமா? ஆலயம் செல்கின்றோம். ஆரவாரத்தோடு பணிகள் பலவும் செய்கின்றோம். நாம் ஆண்டவருக்கு அருகிலிருக்கின்றோம் என்று எண்ணத் தோன்றுகின்றது. பேதுருவைப்போல "ஆண்டவரே நீர் சொல்லும் இந்த உவமை எங்களுக்கா? எல்லாருக்குமா? " என்று நாம் கேட்டால் " உங்களிடம் மிகுதியாகவே எதிர்பார்க்கப்படும்" என்பதே ஆண்டவர் இயேசு இன்றைய இறைவார்த்தையின் வழியாக நமக்குத் தரும் பதிலாகும். நம் ஒவ்வொருவரது வாழ்க்கை நிலைகள், உடமைகள், திறமைமைகள், வலிமைகள், கடமைகள் பொறுப்புக்கள், அதிகாரங்கள் அனைத்தும் தம் சித்தம் நிறைவேறவெனக் கடவுள் நமக்குக் கொடுத்தவை. நாம் அவரால் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் என்பதை நாம் என்றும் மனதிற்கொண்டு வாழவேண்டும். அதிகார துர்ப்பிரயோகம் என்பது இங்கு இறைமகனால் மிகவும் கண்டிக்கப்படுகின்றதை நாம் காணலாம். பாதம் கழுவி பணிவிடை செய்யவெனக் கடவுளால் அழைக்கப்பட்ட நாம் அதிகாரிகள போல் நடந்து கொள்வது மிகவும் கண்டிக்கத்தக்கது என எமது திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு அறிவுறுத்துகின்றார். ஆளுக்கொரு போதனை அல்ல ஆண்டவரின் போதனை. அனைவருக்கும் அது சமமானதே அது!